**ஸ்ரீதணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா**
பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிஷர், பஞ்சாங்க கணிதக்ஞர்
9, 4வது தெரு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை 45, கைபேசி: 98403 69677
prohithar@gmail.com www.prohithar.com www.thanigaipanchangam.com


## வைகாசி மாத மடல் - துன் முகி வருடம்


**காப்பிரைட் தகவல் - வேறு இணையங்களில் வெளியிட அனுமதி இல்லை**


**மாத பிறப்பு**

திருக்கணிதப்படி : 14.05.2016 சனி அன்று மாலை 04:42 மணிக்கு ரிஷப ரவி பிரவேஸம் மற்றும் வைகாசி மாத பிறப்பு
வாக்கியப்படி: 14.05.2016 சனி அன்று 27 நாழிகை 47 விநாழிகை ரிஷப ரவி பிரவேஸம் மற்றும் வைகாசி மாத பிறப்பு

---

**சுக்கிர சஷ்டி**

27.05.2016 வெள்ளி மற்றும் 10.06.2016 வெள்ளி ஆகிய தினங்களில் எதிரிகள் தொல்லை நீங்க முருகனுக்கு சத்ருசம்ஹார பூஜை செய்ய நன்று.

---

**புத ஜெயந்தி: 17.5.2016 செவ்வாய்**

நவக்கிரகத்தில் ஒன்றான புதன் பகவான் பிறந்த நாளாகும். இத்தினத்தில் விஷ்ணுவிற்கும், புதனுக்கும் அர்ச்சனை செய்து வழிபட்டால் கல்வியில் மேண்மை கிட்டும்.

---

**கத்திரி - அக்னி நட்சத்திர முடிவு**

கத்திரி முடிவு: சூரியன் கார்திகை நட்சத்திரத்தின் ஊடாக பயணித்து முடிவுறும் காலம் 25.5.2016 புதன் கிழமை அதிகாலை 02:07 மணி

அக்னிநட்சத்திர முடிவு: சூரியன் ரோகினி நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் பிரவேசிக்கும் காலம் 28.5.2016 சனிக்கிழமை பகல் 1:28 மணி

---

**வைகாசி விசாகம்: 8 சனிக்கிழமை 21.5.2016**

வைகாசி பவுர்ணமியும், மாலை சந்திரோதயத்தில் விசாகம் சேர்ந்து வருவது மிகவும் விசேஷமாகும். முருகன் அவதாரதிருநாளான இன்று அறுபடைவீடுகளில் பக்தர்கள் காவடி எடுத்து தமிழ்கடவுள் முருகனை வணங்குவர்

**பௌர்ணமி விரதம்:** இத்தினத்தில் அம்மனுக்கு விரதம் இருந்து மாலையில் தரிசித்தால் மங்களம் பொங்கும் மேலும் இன்று திருப்புகழ் பாடி முருகப்பெருமானை வணங்கினால் பிணி நீங்கி உடல் நலம்பெறும்.
**கிரிவலம்:** சனிக்கிழமை இரவு கிரிவலம் செல்லுதல் நன்று

---

**ஐவர் திருநட்சத்திர தினங்கள்:**

**ஸ்ரீ திருஞானசம்பந்தர் வைகாசி 11 செவ்வாய் 24.5.2016**

சீர்காழியில் பிறந்து அழுதநிலையில் உமையாளிடமே ஞானப்பால் குடித்து தேவாரத்தை தமிழுக்கு அளித்த ஞானகொழுந்தனின் திருநாள் இன்று வெகுவிமர்சையாக அனைத்து சிவத்தலங்களிலும் அவரின் திருவுருவத்திற்கு அபிஷேகங்களும், திருவீதிஉலாவும் நடைபெறும். தமிழ் சான்றோர் திருமறை ஓதி சிவனை போற்றி புகழும் நாட்களில் இன்று முக்கியமான நாளாகும்.

**ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள்: வைகாசி 26 புதன் 8.6.2016**

பெரியபுராணத்தை அளித்த சேக்கிழார்பெருமானுக்கு அனைத்து சிவாலயங்களிலும் மற்றும் சென்னை அருகில் உள்ள குன்றத்தூரில் அவரது திருக்கோவிலிலும் சிறப்பான வழிபாடுகள் நடைபெறும்.

---

**நரசிம்ம ஜயந்தி: வைகாசி 7 வெள்ளி 20.5.2016**

பகவான் விஷ்ணு தன் பரமபக்தனான பிரகலாதனைக் காத்து இரணியன் என்ற கொடிய அரக்கனை வதம்செய்ய எடுத்த அவதாரமே நரசிம்ம அவதாரமாகும். தசாவதாரங்களில் இது நான்காம் அவதாரம். இன்று விரதம் இருந்து பெருமாளை வழிபட்டால் கோபம் நீங்கி மனம் சாந்தமடையும். சுவாதி (அவதார) நட்சத்திர அடிப்படையில் முன்னாள் (31.5.2015 - ஞாயிறு) நரசிம்ம ஜயந்தி

---

**புன்னாக கௌரிவிரதம்: 23 ஞாயிறு 5.6.2016**

அம்பாளை துதித்து விரதம் இருந்து துளசிமாலை சாற்றினால் நோய் நீங்கி சுகம் கிட்டும்

---

**ரம்பா திருதியை, கதலி கௌரி விரதம்: வைகாசி 25 செவ்வாய் 7.6.2016**

அம்மனை குங்குமப்பூ தீர்த்தால் அபிஷேகம் செய்திடின் பெண்களுக்கு அழகு வசீகரம் கூடும். கன்னிப்பெண்களுக்கு திருமண பாக்கியம் ஏற்படும். முகப்பரு நீங்கி அழகுற இருக்க அம்மன் சன்னதியில் ல்லிதா சஹஸ்ரநாம்ம் படித்தல் நன்று

---

**தூமாவதீ ஜயந்தி: வைகாசி மாதம் 30 ஞாயிறு 12.6.2016**

பராசக்தியின் பத்து வடிவ (தசாமஹாவித்யா) ஆற்றல்களில் ஏழாவதாக தோன்றும் தூமாவதியை (காளியை) வழிபடுவதால் எமபயம் நீங்கும்

---

**பானு சப்தமி: வைகாசி 16 ஞாயிறு 29.5.2016 (அருணோதயத்தில் ஞாயிறும் சப்தமியில் இணைந்தகாலம்)**

ஞாயிற்றுக்கிழமையில் சப்தமி திதி வரும் நாளன்று சூரியனை தரிசித்து மாலையில் சிவ-விஷ்ணுவை வனங்கினால் அறிவும், ஆற்றலும் கிட்டும்.

---

**ஆகாமாவை 21.5.2016 சனிக்கிழமை**

"ஆகாமாவை" என்பது ஆஷாட, கார்த்திக, மாக வைசாகம் என்கிற சாந்திரமான(சந்திரன் அடிப்படையிலான) மாதங்களின் முதல் எழுத்து சேர்கையால் வழங்கப்படும் வார்த்தை. இந்த சந்திரமாதங்கள் ஆடி, கார்த்திகை, மாசி, வைகாசி ஆகிய தமிழ்(சூரிய) மாதங்களுக்கு சற்று இணையான மாதங்கள்

இந்த மாதங்களில் வரும் பௌர்னமி அன்று உதயத்தில் வைகையறைப்பொழுதில் (உஷாக்காலம்- அதிகாலை ஐந்தாம் ஜாம முடிவில்) பௌர்னமி திதி இருக்க சூரிய உதயம் முன்னதாக, சந்திரன் மேற்கில் மறையும் முன்னர் கடல், நதி, ஆறு, கோவில் குளம் ஆகியவற்றில் குளிப்பது மிகவும் புண்ணியமாகும். சாஸ்திரங்களில் இந்நாள் புணிதநீராடல் நாள் எனவகைப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பு: ஒரு நாள் என்பது இரவில் 5 ஜாமங்கள், பகலில் 5 ஜாமங்கள் என மொத்தம் 10 ஜாமங்களை கொண்டது,
பகல் இரவு சமமாக உள்ள நாளில் ஒரு ஜாமம் என்பது 6 நாழிகை(1மணி24 நிமி)அளவில் இருக்கும்
குளிர்காலங்களில் இரவு ஜாமம் நீண்டும், வெயில்காலங்களில் பகல் ஜாமம் நீண்டும் இருக்கும்
இந்த சந்திரமாத பௌர்ணமி ஆனி, ஐப்பசி, தை, சித்திரை தமிழ் மாதங்களிலும் முன் கூட்டியும் வரும்

---

## மாத சுபநாள் விளக்கம்

வைகாசி 3 திங்கள் 16.05.2016
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று. பூமி பூஜை தவிர அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

வைகாசி 5 புதன் 18.05.2016 (சூரிய உதயம் முதல் பகல் 10:30 மணி வரை மரண யோகம்)
1. அதிகாலை 4:30 - 6 மணி வரை கணபதி ஹோமம் செய்ய நன்று.
2. பகல் 10:30 மணிக்கு மேல் நாள் முழுவதும் அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

வைகாசி 6 வியாழன் 19.05.2016 வியதீபாதம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபம் செய்ய நன்று.
அன்று சுபம் செய்யும் முன்னர் நல்லெண்ணைய், அரிசியை ஆதரவற்றோர் இல்லத்தில் தானம் செய்யவும்

வைகாசி 7 வெள்ளி 20.05.2016 - சூரிய உதயத்திற்கு பின்னர் கரிநாள்
அதிகாலை 4:30 - 6 மணி (சூரிய உதயம்) வரை கணபதி ஹோமம் நன்று.
தெலுங்கர்களுக்கு நாள் முழுவதும் நன்று.

வைகாசி 9 ஞாயிறு 22.05.2016 இஷ்டி
இஷ்டி நாள் அதிகாலைஅனைத்து ஹோமங்கள் செய்ய நன்று.

வைகாசி 13 வியாழன் 26.05.2016 சுக்ல சதுர்த்தி உதயம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

வைகாசி 14 வெள்ளி 27.05.2016
அதிகாலை 4:30 - 6 மணி வரை கிரஹப்பிரவேஸம், கணபதி ஹோமம் செய்ய நன்று.

வைகாசி 16 ஞாயிறு 29.05.2016
அதிகாலை முதல் காலை 6 மணி வரை கணபதி ஹோமம், கிரஹப்பிரவேஸம் செய்ய நன்று
(காலை 6 மணிக்கு மேல் கரிநாள் மற்றும் 6:20க்கு அஷ்டமி துவங்கும்)

வைகாசி 19 புதன் 01.06.2016
அதிகாலை 4:30 - 6 மணிக்கு கிரஹப்பிரவேஸம் நன்று.
(சூ. உதயம் பின்னர் மரண யோகம்)

வைகாசி 20 வியாழன் 02.06.2016 இரவு 8:15 மணி வரை
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

வைகாசி 24 திங்கள் 06.06.2016
அதிகாலை முதல் காலை 10:25 மணி வரை அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

வைகாசி 26 புதன் 08.06.2016 (சுக்ல சதுர்த்தி)
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

வைகாசி 27 வியாழன் 09.06.2016
அதிகாலை 4:30 - 6 மணி வரை கணபதி ஹோமம், கிரஹப்பிரவேஸம் செய்ய நன்று.

---

**புதிய இல்ல கிரஹப்பிரவேஸம், கணபதி ஹோம நாட்கள்**

16.05.2016 திங்கள்
18.05.2016 புதன்
19.05.2016 வியாழன்
20.05.2016 வெள்ளி
26.05.2016 வியாழன்
27.05.2016 வெள்ளி
29.05.2016 ஞாயிறு
01.06.2016 புதன்
02.06.2016 வியாழன்
06.06.2016 திங்கள்
08.06.2016 புதன்
09.06.2016 வியாழன்

---

**மாலை நேர சுபநாட்கள்: நிச்சிய தாம்பூலம், மஞ்சள் நீராட்டு விழா**

| | |
|---|---|
| 16.05.2016 திங்கள் | 26.05.2016 வியாழன் |
| 18.05.2016 புதன் | 02.06.2016 வியாழன் |
| 19.05.2016 வியாழன் | 08.06.2016 புதன் |

---

**விரதாதி நாட்கள்**

| | | |
|---|---|---|
| விரதாதி நாட்கள் | | |
| துர்காஷ்டமி | 14.5.2016 சனி | |
| வாசவி ஜயந்தி | 16.5.2016 திங்கள் | |
| சுக்ல ஏகாதசி(மோகினி ஏகாதசி) | 17.5.2016 செவ்வாய் | |
| புத ஜெயந்தி | 17.5.2016 செவ்வாய் | |
| பரசுராம துவாதசி | 18.5.2016 புதன் | |
| சுக்ல பிரதோஷம் | 19.5.2016 வியாழன் | |
| ஸ்ரீநரசிம்ம ஜயந்தி | 20.5.2016 வெள்ளி | |
| பௌர்ணமி | 21.5.2016 சனி | |
| வைகாசி விசாகம் | 21.5.2016 சனி | |
| அர்த்தநாரீஸ்வர விரதம் | 21.5.2016 சனி | |
| சம்பத் கௌரி விரதம் | 21.5.2016 சனி | |
| காஞ்சி மகாபெரியவாள் ஜயந்தி | 22.5.2016 ஞாயிறு | |
| சங்கடஹர சதுர்த்தி | 25.5.2016 புதன் | |
| சஷ்டி | 27.5.2016 வெள்ளி | |
| சிரவணம் | 27.5.2016 வெள்ளி | |
| கிருஷ்ண ஏகாதசி (வரூதினீ ஏகாதசி) | 01.6.2016 புதன் | |
| கிருஷ்ண பிரதோஷம் | 02.6.2016 வியாழன் | |
| கிருத்திகை | 03.6.2016 வெள்ளி | |
| சிவராத்திரி | 03.6.2016 வெள்ளி | |
| அமாவாசை | 04.6.2016 சனி | |
| புன் னாக கௌரி விரதம் | 05.6.2016 ஞாயிறு | |
| ரம்பா திருதியை | 07.6.2016 செவ்வாய் | |

---

**அஷ்டம சுத்தி தினங்கள் (காது குத்தல், பூமி பூஜை, கிணறு எடுக்க, பத்திர பதிவு)**

| | | |
|---|---|---|
| 16.5.2016 | திங்கள் | அதிகாலை 5:40 மணி முதல் காலை 7:30 மணி வரை, காலை 9 மணி முதல் காலை 9:54 மணி வரை, பகல் 12:30 மணி முதல் பிற்பகல் 2:05 மணி வரை, மாலை 6:15 மணி முதல் இரவு 10:33 மணி வரை. |
| 18.5.2016 | புதன் | அதிகாலை 5:35 மணி முதல் காலை 6 மணி வரை, பிற்பகல் 1:30 மணி முதல் பிற்பகல் 1:55 மணி வரை, மாலை 6:15 மணி முதல் இரவு 10:25 மணி வரை. |
| 19.5.2016 | வியாழன் | அதிகாலை 5:30 மணி முதல் காலை 6 மணி வரை, காலை 7:30 மணி முதல் காலை 9:40 மணி வரை, பகல் 11:55 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை, மாலை 6:05 மணி முதல் இரவு 10:20 மணி வரை. |
| 20.5.2016 | வெள்ளி | அதிகாலை 5:30 மணி முதல் காலை 9:30 மணி வரை, பகல் 12 மணி முதல் பிற்பகல் 1:50 மணி வரை, மாலை 6 மணி முதல் இரவு 10:15 மணி வரை. |
| 26.5.2016 | வியாழன் | பகல் 11:30 மணி முதல் பகல் 1:25 மணி வரை, மாலை 5:35 மணி முதல் இரவு 9:55 மணி வரை. |
| 02.6.2016 | வியாழன் | அதிகாலை 4:35 காலை 6 மணி வரை, காலை 7:30 மணி முதல் காலை 8:45 மணி வரை, பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, மாலை 5:10 மணி முதல் இரவு 8:15 மணி வரை. |
| 06.6.2016 | திங்கள் | அதிகாலை 4:20 மணி முதல் காலை 7:30 மணி வரை. |
| 08.6.2016 | புதன் | அதிகாலை 4:10 மணி முதல் காலை 8:20 மணி வரை, பகல் 10:35 மணி முதல் பகல் 12 மணி வரை, பிற்பகல் 1:30 மணி முதல் பிற்பகல் 2:35 மணி வரை, மாலை 4:45 மணி முதல் மாலை 6:55 மணி வரை. |

## சாந்தி முகூர்த்தம்

| | | |
|---|---|---|
| 16.5.2016 | திங்கள் | இரவு 9 மணி முதல் இரவு 10:30 மணி வரை. |
| 18.5.2016 | புதன் | இரவு 9 மணி முதல் இரவு 10 மணி வரை. |
| 19.5.2016 | வியாழன் | இரவு 9 மணி முதல் இரவு 10:20 மணி வரை. |
| 20.5.2016 | வெள்ளி | இரவு 9:30 மணி முதல் இரவு 10:15 மணி வரை. |
| 26.5.2016 | வியாழன் | இரவு 9 மணி முதல் இரவு 9:55 மணி வரை |
| 02.6.2016 | வியாழன் | இரவு 7:30 மணி முதல் இரவு 8:15 மணி வரை. |

## மூதாதையர் வழிபாடு நாட்கள்: (புணித ஸ்தங்களில் தர்பணம், பிண்டம் வைத்து வழிபட உகந்த நாள்)

| | |
|---|---|
| வியதீபாத சிரார்த்தம் | 19.5.2016 வியாழன் , 13.6.2016 திங்கள் |
| வைதிருதி சிரார்த்தம் | 29.5.2016 ஞாயிறு |
| விஷ்ணுபதி | 14.5.2016 சனி |
| பார்தீபகல்பாதி | 24.5.2016 செவ்வாய் |
| ஷடசீதி: | 14.6.2016 செவ்வாய் |

மே : 14,15, 17, 19, 21, 22, 24, 29, 30 ஜூன் : 1, 4, 5, 13, 14

## மாதத்தில் ஏர் உழ உகந்த நாட்கள் : (உகந்த திதி, நட்சத்திர சேர்கை நாட்கள்)

மாடு வாங்க : 8, 12, 20, 24, 26
ஏர் உழ : 3, 6, 13, 20, 24, 26
எரு விட : 3, 6, 13, 26
விதை விதைக்க : 3, 13, 20, 24, 26

## வைகாசி மாத சுபமுகூர்த்த நாட்கள்

| த.தே | கிழமை | ஆ.தே | திதி | நட் | யோ | லக்னம் | நேரம்-காலை |
|---|---|---|---|---|---|---|---|
| 03 | திங்கள் | 16.05.2016 | வ.தசமி | உத்திரம் | சி | ரிஷபம் | 06:00 - 07:30 |
| 03 | திங்கள் | 16.05.2016 | வ.தசமி | உத்திரம் | சி | மிதுனம் | 09:00 - 10:00 |
| 06 | வியாழன் | 19.05.2016 | வ.திரியோதசி | சித்திரை | சி | மிதுனம் | 07:30 - 09:00 |
| 13 | வியாழன் | 26.05.2016 | தே.பஞ்சமி | உத்திராடம் | சி | கடகம் | 09:30 - 10:30 |
| 20 | வியாழன் | 02.06.2016 | தே.துவாதசி | அசுபதி | அ | மிதுனம் | 07:30 - 08:45 |
| 24 | திங்கள் | 06.06.2016 | வ.துவிதியை | மிருகசீருஷம் | சி | மிதுனம் | 06:00 - 07:30 |
| 26 | புதன் | 08.06.2016 | வ.சதுர்த்தி | புனர்பூசம் | சி | மிதுனம் | 06:15 - 07:30 |
| 26 | புதன் | 08.06.2016 | வ.சதுர்த்தி | பூசம் | சி | கடகம் | 09:00 - 10:00 |

## வாக்கிய பஞ்சாங்க முறை முகூர்த்த நாட்கள்: வைகாசி 3, 6, 13, 20, 24, 26, 27

### வானியல் தகவல்

| | | |
|---|---|---|
| சுக்கிரன் அருகில் புதன் | 2016 May 14 02 | 0.43° North |
| மகம் அருகில் நிலவு | 2016 May 14 13 | 2.25° North |
| குரு அருகில் நிலவு | 2016 May 15 15 | 1.99° North |
| சித்திரை அருகில் நிலவு | 2016 May 18 20 | 5.16° South |
| நிலவு தொலைவுநிலை | 2016 May 19 04 | 405910.809 km |
| செவ்வாய் அருகில் நிலவு | 2016 May 22 02 | 6.02° South |
| செவ்வாய் எதிர்நிலை | 2016 May 22 17 | |

| | | |
|---|---|---|
| கேட்டை அருகில் நிலவு | 2016 May 22 17 | 9.62$^{\circ}$ South |
| சனி அருகில் நிலவு | 2016 May 23 03 | 3.21$^{\circ}$ South |
| ரோகினி அருகில் சுக்கிரன் | 2016 Jun 2 09 | 5.33$^{\circ}$ South |
| சனி எதிர்நிலை | 2016 Jun 3 12 | |
| புதன் அருகில் நிலவு | 2016 Jun 3 15 | 0.74$^{\circ}$ North |
| நிலவு அண்மைநிலை | 2016 Jun 3 16 | 361181.497 km |
| ரோகினி அருகில் நிலவு | 2016 Jun 5 01 | 0.50$^{\circ}$ South |
| சுக்கிரன் அருகில் நிலவு | 2016 Jun 5 07 | 4.95$^{\circ}$ North |
| புதன் மீஉயர்நிலை | 2016 Jun 5 14 | 24.2$^{\circ}$ West |
| சுக்கிரன் சூரிய வெளிசேர்கை | 2016 Jun 7 03 | 0.01$^{\circ}$ South |
| புனர்பூசம் அருகில் நிலவு | 2016 Jun 8 04 | 10.80$^{\circ}$ North |
| மகம் அருகில் நிலவு | 2016 Jun 10 21 | 1.99$^{\circ}$ North |
| குரு அருகில் நிலவு | 2016 Jun 12 01 | 1.49$^{\circ}$ North |




15.5.2016

www.thanigaipanchangm.com

**பாலு சரவண சர்மா - புரோகிதர் - ஜோதிடர் - பஞ்சாங்க கணிதக்ஞர்**

பதிப்புரிமை
COPYRIGHT

**எச்சரிக்கை: இந்த மடலில் சிறிய திருத்தங்கள் உண்டு**